**சுருக்கம்**

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை – கல்வி – விடுதிகள் – விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணாக்கர்களுக்கு அவர்தம் உடைமைகளை பாதுகாப்பாக வைக்கும் பொருட்டு **1297** விடுதிகளில் (1254 ஆ.தி.ந விடுதிகள் + 43 ப.ந விடுதிகள் ) ஏற்கனவே அறையில் அமைக்கப் பெற்றிருக்கும் R.C.C அலமாரிகளுக்கு தனித்தனி இரும்புக் கதவு மற்றும் பூட்டு சாவி ஏற்பாடுகளுடன் கூடிய வசதிகளை **ரூ.25.94 கோடி** மதிப்பீட்டில் ஏற்படுத்துதல் – நிர்வாக ஒப்பளிப்பு – ஆணை வெளியிடபப்டுகிறது.

---

**ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் (ஆதிந–2) துறை**

அரசாணை (**நிலை**) எண்:**70** — **நாள் : 24.12.2018**

விளம்பி வருடம்
மார்கழி திங்கள் 9–ஆம் நாள்
திருவள்ளுவர் ஆண்டு 2049

படிக்கப்பட்டது:–

ஆதிதிராவிடர் நல இயக்குநரின் கடிதம் எண். த.1/13320/2018, நாள். 31.08.2018.

-----

**ஆணை:**

**2018–2019**–ஆம் ஆண்டிற்கான வரவு செலவு கூட்டத் தொடரில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் சட்டமன்றப் பேரவை விதி **110**–இன் கீழ் பின்வருமாறு அறிவிக்கப்பட்டது:-

> "ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறையின் கீழ் இயங்கும் 1,367 விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணாக்கர்களுக்கு அவர்தம் உடைமைகளை பாதுகாப்பாக வைக்கும் பொருட்டு ஏற்கனவே அறையில் அமைக்கப் பெற்றிருக்கும் R.C அலமாரிகளுக்கு, மாணாக்கர் எண்ணிக்கைக்கேற்ப, தனித்தனி இரும்புக் கதவு மற்றும் பூட்டு சாவி ஏற்பாடுகளுடன் கூடிய வசதிகளை ஏற்படுத்தித் தர விடுதி ஒன்றிற்கு 2 இலட்சம் ரூபாய் வீதம் மொத்தம் 27 கோடியே 34 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் இரும்பு அலமாரிகள் நடப்பாண்டில் அமைக்கப்படும்."

2. மேலே படிக்கப்பட்ட கடிதத்தில், ஆதிதிராவிடர் நல இயக்குநர் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் வெளியிடப்பட்ட மேற்காணும் அறிவிப்பினை செயல்படுத்தும் பொருட்டு, ஏற்கனவே விடுதி அறைகளில் அமைக்கப் பெற்றிருக்கும் R.C.C அலமாரிகளுக்கு இரும்புக் கதவு மற்றும் பூட்டு சாவி ஏற்பாடுகளுடன் கூடிய வசதியினை ஏற்படுத்துவதற்கான திட்ட மதிப்பீட்டு அறிக்கையினை (Rough cost estimate) சரக்கு மற்றும் சேவை வரி (G.S.T), நிர்வாக செலவினம் உட்பட விடுதி ஒன்றிற்கு ரூ.2.70 இலட்சம் (ரூபாய் இரண்டு இலட்சத்து எழுபதாயிரம் மட்டும்) என்ற அடிப்படையில் தயார் செய்து தாட்கோ மேலாண்மை இயக்குநர் அனுப்பியுள்ளதாகவும், அதனடிப்படையில், ஆதிதிராவிடர் நலத்துறையின் கீழ் இயங்கி வரும் **1324** விடுதிகளில் வாடகைக் கட்டடங்களில் இயங்கி வரும் **56** விடுதிகள் மற்றும் இவ்வாண்டு மாணவர் சேர்க்கை நடைபெறாத **14** விடுதிகள் என **70** விடுதிகள் தவிர்த்து, **1254** விடுதிகளுக்கு இவ்வசதியினை ஏற்படுத்திட ரூ.3,385.80 இலட்சம் தேவைப்படுவதாக தெரிவித்து, அத்தொகையினை ஆதிதிராவிடர் நல மாணவரில்லங்கள் கட்டுதல் (த.தொ.கு. 4225 01 277 JA 1602) எனும் கணக்குத் தலைப்பின் கீழ் ஒதுக்கீடு செய்து அரசாணை வழங்குமாறு அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

**(த.பி.பா.)**

3. ஆதி திராவிடர் நல இயக்குநரின் மேற்காணும் கருத்துருவினை அரசு கவனமுடன் ஆய்வு செய்தது. பழங்குடியினர் நல இயக்ககத்தின் கீழ் 43 விடுதிகள் அரசுக் கட்டடங்களில் இயங்கி வருவதால், அவ்விடுதிகளிலும் இந்த வசதியை அமைக்கலாமென முடிவு செய்து, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்டவாறு, வாடகைக் கட்டடங்களில் இயங்கி வரும் 56 விடுதிகள் மற்றும் இவ்வாண்டு மாணவர் சேர்க்கை நடைபெறாத 14 விடுதிகள் என 70 விடுதிகள் தவிர்த்து, ஆதிதிராவிடர் நலத்துறையின் கீழ் இயங்கி வரும் 1254 விடுதிகளுடன் பழங்குடியினர் நலத்துறையின் கீழ் அரசுக் கட்டடங்களில் இயங்கிவரும் 43 விடுதிகளையும் சேர்த்து மொத்தம் **1297** விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணாக்கர்களுக்கு அவர்தம் உடைமைகளை பாதுகாப்பாக வைக்கும் பொருட்டு ஏற்கனவே அறையில் அமைக்கப் பெற்றிருக்கும் R.C.C அலமாரிகளுக்கு, முதற்கட்டமாக 50 மாணாக்கர் பயன்படுத்திடும் வகையில், தனித்தனி இரும்புக் கதவு மற்றும் பூட்டு சாவி ஏற்பாடுகளுடன் கூடிய வசதிகளை ஏற்படுத்தித் தர விடுதி ஒன்றிற்கு ரூ. 2 இலட்சம் வீதம் மொத்தம் **ரூபாய் 25.94 கோடி** மதிப்பீட்டில் இரும்பு அலமாரிகள் நடப்பாண்டில் அமைப்பதற்கு நிர்வாக ஒப்புதல் வழங்கி அரசு ஆணையிடுகிறது.

4. மேலே குறிப்பிட்டுள்ள பணி, தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதி மற்றும் மேம்பாட்டுக் கழகம் (தாட்கோ), சென்னை நிறுவனத்தால் தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளி சட்டம் 1998/விதிகள் 2000–ஐ பின்பற்றி மேற்கொள்ளப்பட வேண்டும்.

5. மேலே பத்தி 3–இல் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ள பணிக்கான செலவினம் கீழ்க்காணும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்:-

> “ 4225 - ஆதிதிராவிடர், பழங்குடியினர் , ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் சிறுபான்மையினர் நலன் குறித்த மூலதனச் செலவு – 01 ஆதிதிராவிடர் நலன் 277 கல்வி மாநிலச் செலவினங்கள் – JA- ஆதி திராவிடர் மாணவரில்லங்கள் கட்டுதல் – 16 பெரும் பணிகள்” (த.தொ.கு. 4225 01 277 JA 1603) ”

6. இத்திட்டத்தை தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப் புள்ளிகள் சட்டம்–1998/விதிகள் 2000–ஐ பின்பற்றி உரிய காலத்தில் செய்து முடிக்கவும், பணியினை கண்காணித்து நிறைவடைந்த நிலையில், அறிக்கை ஒன்றினை அரசுக்கு அனுப்புமாறும் ஆதி திராவிடர் நல இயக்குநர், பழங்குடியினர் நல இயக்குநர் மற்றும் மேலாண்மை இயக்குநர், தாட்கோ ஆகியோர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

7. இவ்வாணை நிதித்துறையின் அலுவல் சார்பற்ற குறிப்பு எண்.62978/ஆதி(ம)பந/2018, நாள் 24.12.2018–இல் பெறப்பட்ட ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**ஒட்டெம் டாய்**
**அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்**

**பெறுநர்:**

ஆதிதிராவிடர் நல இயக்குநர், சென்னை – 600 005.
பழங்குடியினர் நல இயக்குநர், சென்னை – 600 005.
மேலாண்மை இயக்குநர், தாட்கோ, சென்னை –600 018.
மாநில கணக்காய்வுத் தலைவர், சென்னை –600 018.
சம்பளக் கணக்கு அலுவலர், சென்னை – 600 018.
சம்பளக் கணக்கு அலுவலர் (கிழக்கு), சென்னை – 600 008.
அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள்.
அனைத்து மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர்கள்.
அனைத்து மாவட்ட கருவூல அலுவலர்கள்.

(த.பி.பா.)

**<u>நகல்:</u>**

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அலுவலகம்.
மாண்புமிகு அமைச்சர், (ஆதி(ம)பந) அவர்களின் முதுநிலை சிறப்பு நேர்முக உதவியாளர்,
சென்னை –600 009.
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை கூடுதல் தலைமைச்
செயலாளரின் முதுநிலை தனிச் செயலர், சென்னை –600 009.
நிதி(ஆதி(ம)பந)துறை, சென்னை –600 009.
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்(அநமு.1/ஆதிந.4/ ப.மே.1) துறை,
சென்னை –600 009.
இருப்புக்கோப்பு /உதிரி நகல்

**//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//**

24/12/18
**பிரிவு அலுவலர்**
24.12.18